# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **08 மார்ச் 2020** | **தவக்காலம் இரண்டாம் ஞாயிறு** | **முதல் ஆண்டு** |



# திருப்பலிகள் மீண்டும் ஆரம்பம்

சிங்கப்பூர் கத்தோலிக்க உயர்மறைமாவட்டத்தில் உள்ள அனைத்துக் கத்தோலிக்க ஆலயங்களிலும் COVID-19 கிருமித் தொற்றுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின், வருகின்ற 14-03-2020 (சனி) மற்றும் 15-03-2020 (ஞாயிறு) முதல் ஞாயிற்றுக்கிழதைத் திருப்பலிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. 16-03-2020 திங்கள் முதல், தினசரி வாரநாள் திருப்பலிகள் (Weekday Masses) ஆரம்பமாகும்.

**மீண்டும் தொடங்கப்படவுள்ளத் திருப்பலிகள் சிங்கப்பூர் சுகாதார அமைச்சகத்தின் (MOH) வரைமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் உட்பட்டது.**

தகுந்த காரணங்களினால், திருப்பலிக்கு வருவதைத் தவிர்க்க விரும்புபவர்கள் தொடர்ந்து ONLINE திருப்பலியில் பங்கு கொள்வதன் மூலமாகவோ, தனிப்பட்ட செபம் மற்றும் தினசரி வாசகங்களை வாசித்துத் தியானிப்பதன் மூலமாகவோ உங்கள் ஆன்மீக கடமையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். மேலும் தகவல்களுக்கு www.catholic.sg ஐ அணுகவும்.

தற்போதைய COVID-19 நிலைமையிலிருந்து நாட்டு மக்கள் அனைவரது பாதுகாப்பை மேம்படுத்தும் முகமாக, ஒவ்வொரு தடவையும் நீங்கள் திருப்பலியில் கலந்து கொள்ளும் முன், உங்களைத் தொடர்பு கொள்வதற்கான தகவல்களை (உங்கள் முழுப்பெயர், தொலைபேசி இலக்கம், திருப்பலியின் போது நீங்கள் அமர்ந்திருந்த இடம்) பூர்த்தி செய்ய வேண்டியது உங்கள் கடமையாகும். தேவைப்படும் போது சுகாதார அமைச்சு உங்களைத் தொடர்பு கொள்வதற்கு இது உதவியாயிருக்கும்.

- ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள், ஒரே வரிசையில் அமர்ந்து ஒன்றாகத் திருப்பலியில் கலந்து கொண்டால், அதில் ஒருவருடைய தகவலோடு, குடும்பத்தில் எத்தனை நபர்கள் திருப்பலியில் கலந்து கொண்டார்கள் என்பதை மட்டும் பூர்த்தி செய்தால் போதுமானது. குடும்பத்தோடு சேர்ந்து அமராத குடும்ப உறுப்பினர்கள், தனித்தனியாக தகவல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

- ஒரே குடும்பத்தைச் சாராதவர்கள் குழுவாகத் திருப்பலியில் கலந்து கொள்ளும் போது (நண்பர்கள், ஆலயக் குழுக்கள், வருங்கால கணவன்/மனைவி) ஒவ்வொருவரும் தனித்தனியாக தகவல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**பின்வரும் மூன்று வழிகளில் உங்கள் தகவல்களை நீங்கள் சமர்ப்பிக்கலாம்.**

1. ஆலயத்தில் இருக்கும் QR CODE ஐ ஒளிவருடல் செய்து ONLINE இல் பூர்த்தி செய்யலாம்.

(தொடர்ச்சி...)

2. QR CODE இற்கு கீழ் சிவப்பு நிறத்தில் கொடுக்கப்பட்டுள்ள URL ஐப் பயன்படுத்தி ONLINE இல் பூர்த்தி செய்யலாம்.
3. மேலுள்ள இரண்டு முறைகளிலும் தகவல்களைச் சமர்ப்பிக்க முடியாதவர்கள், உங்கள் கைகளை உயர்த்தி ஆலயப் பணியாளர்களிடமிருந்து படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்யலாம். இந்த செய்கைக்கு முன்னரும் பின்னரும் இறைமக்களின் கைகள் தூய்மையாக்கப்பட்டுள்ளதை ஆலயப்பணியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**திருப்பலிக்கு வரும் அனைவருக்கும் உடல்வெப்பநிலை பரிசோதனை செய்யப்படும். ஆகவே, திருப்பலி நேரத்திற்கு முன்னதாகவே வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

## தூய லூர்து அன்னை ஆலயம் - ONLINE MASSES

COVID-19 கிருமித்தொற்றின் காரணமாக சிங்கப்பூர் உயர் மறைமாவட்ட ஆலயங்களில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருப்பலிகள், மீண்டும் 14-03-2020 (Sun-Sat Mass) முதல் ஆரம்பமாகும்.
கீழே தரப்பட்டுள்ள Link ஐப் பயன்படுத்தி https://www.facebook.com/ChurchOfOurLadyOfLourdes அல்லது ஆலயத்தின் YouTube Channel: http://tiny.cc/ololsg.com வழியாக, நமது ஆலயத்தின் Online திருப்பலியில் கலந்து கொள்ளலாம்.

திருப்பலி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள நமது ஆலயத்தின் YouTube பக்கத்தை Subscribe செய்யத் தவறாதீர்கள்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

COVID-19 கிருமித் தொற்றின் காரணமாக நமது ஆலயத்தில் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் மறு அறிவித்தல் வரும்வரை நடைபெறாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.




## தவக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், தவக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

ONE
OFFICE FOR THE NEW EVANGELISATION

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | தொடக்கநூல் 12:1-4 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 33: 4-5, 18-19, 20, 22 |
| **பதிலுரை: ஆண்டவரே! உமது பேரன்பு எங்கள் மீத இருப்பதாக!** | |
| **இரண்டாம் வாசகம்:** | திமோத்தேயு 1:8-10 |
| **வாழ்த்தொலி: ஒளிரும் மேகத்தினின்று,தந்தையின் குரலொலி கேட்டது ;என் அன்பார்ந்த மைந்தர் இவரே: இவருக்குச் செவிசாயுங்கள்.** | |
| **நற்செய்தி வாசகம்:** | மத்தேயு 17:1-9 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

